# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 26/2014** **நாள் : 25/11/2014**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

### ஒப்பந்த தொழிலாளர்கள் பேரவை

ஏற்கனவே திட்டமிட்டவாறு ஒப்பந்த தொழிலாளர்களின் சிறப்பு பேரவை 13.11.2014 அன்று வட்டங்களில் நடைபெற்றுள்ளது. இதுவரையில் மாநில மையத்திற்கு 10 திட்டங்களில் இருந்து மட்டுமே விபரங்கள் வந்துள்ளது. சில திட்டங்களில் தேதியை மாற்றி நடத்தி உள்ளனர். சில கிளைகள் இப்போது அதற்கான திட்டமிட்டு பேரவை நடத்துவதற்குண்டான ஏற்பாட்டை செய்து வருகிறது. அனைத்து கிளைகளிலும் பேரவைகள் நடத்தி விபரங்கள் வந்த பின்னரே ஒப்பந்த தொரிலாளர்களின் எண்ணிக்கையை இறுதி செய்ய முடியும்.

### 20.12.2014 ஒப்பந்த தொழிலாளர்களின் திட்டமட்ட ஆர்ப்பாட்டம்

ஒப்பந்த தொழிலாளர்களின் அடுத்த கட்ட நடவடிக்கையாக 11.12.2014 அன்று திட்டமட்டத்தில் ஆர்ப்பாட்டம் செய்வதென்று முடிவு செய்து இருந்தோம். டெல்லி இயக்கத்திற்கு செல்லும் தோழர்கள் 14, 15 தேதிகளில் தான் திரும்பி வருகிறார்கள் என்பதையும் கணக்கில் கொண்டு ஒப்பந்த தொழிலாளர்களின் திட்டமட்ட ஆர்ப்பாட்டத்தை 20.12.2014 அன்று நடத்துவதென்று மாநில மையத்தில் முடிவு செய்துள்ளோம். அதனடிப்படையில் இவ்இயக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து 20.12.2014 அன்று ஒப்பந்த தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். மேலும் இதற்கு தேவையான சுவரொட்டி, துண்டறிக்கைகளை கிளைகளே தயாரித்து கொள்ள வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

### 28.11.2014 அனல் மின் ஊழியர்களின் ஆர்ப்பாட்டம்

ஏற்கனவே திட்டமிட்டவாறு அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மின்வாரிய தலைமையகத்துக்கு முன் 28.11.2014 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. அவ் ஆர்ப்பாட்டத்திற்கு தயாரிப்பாக நான்கு அனல் மின் நிலையங்களிலும் பேரவைகள் நடைபெற்றுள்ளன. ஆர்ப்பாட்டத்திற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய கடிதம் மின் வாரிய நிர்வாகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

### 18.11.2014 பொதுத்துறை ஊழியர்களின் சென்னை கருத்தரங்கு

ஏற்கனவே மத்திய தொழிற்சங்கங்கள் திட்டமிட்டபடி 18.11.2014 அன்று சென்னையில் மாநில பொதுத்துறை நிறுவன ஊழியர்களின் கருத்தரங்கு வெற்றிகரமாக நடைபெற்றது. அதில்

திட்டமிட்டவாறு மத்திய அமைப்பின் தோழர்கள் கணிசமான அளவில் கலந்து கொண்டுள்ளனர்.

## 8.12.2014 டெல்லி பேரணி

தேசிய மின்சார தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்களின் கூட்டமைப்பின் அறைகூவலுக்கிணங்க நாசகர விளைவுகளை உருவாக்கும் மின்சார சட்டம் 2003 இல் தேவையான மாற்றங்களை செய்திடுக. இந்திய மின் துறையில் அந்நிய நாட்டினரை அனுமதித்து கொள்ளைக்காடாக மாற்றாதே! மின்துறையில் ஒப்பந்த அவுட் சோர்சிங் முறையை அமல்படுத்தி உழைப்புச்சுரண்டலை அரங்கேற்றாதே என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து 8.12.2014 அன்று டெல்லி பாராளுமன்றம் நோக்கி நடைபெற உள்ள பேரணி ஆர்ப்பாட்டத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக 250 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொள்ள உள்ளனர். சம்மேளனம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், பொறியாளர் சங்கம், பொறியாளர் கழகம், பொறியாளர் அமைப்பு ஆகியோர்களும் இப்பேரணியில் கலந்து கொள்ள உள்ளனர்.

## இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு, சிஐடியு, வி.ச., வி.தொ.ச., திருவண்ணாமலை கருத்தரங்கு

மின்வாரியங்கள் பிரிப்பு, தனியாருக்கு தாரை வார்ப்பு, மின் கட்டண உயர்வு, மின்துறையில் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கையை குறைத்து மக்கள் சேவை பாதிப்படைந்ததுடன் வேலை இல்லா திண்டாட்டத்தை அதிகப்படுத்துவது. இவைகளால் ஏற்படும் மோசமான விளைவுகளை மின்வாரிய ஊழியர்கள் மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக கருத்தரங்குகள் நடத்துவது என்ற முடிவின் அடிப்படையில் நான்கு பகுதிகளில் நடத்துவது. அதில் முதல் கருத்தரங்கு திருவண்ணாமலையில் டிசம்பர் 15 முதல் 20 ந் தேதிக்குள் நடத்துவது என்றும் அதற்காக தயாரிப்பு பணிகள் துவங்கியுள்ளன. மின்நுகர்வோர்களும், மின் வாரிய ஊழியர்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டியதற்கான ஏற்பாட்டினை செய்ய வேண்டுகிறோம்.

## மின் உற்பத்தி கூட்டு நிறுவனங்களில் மத்திய அமைப்பின் கிளைகள் துவக்க ஏற்பாடு

சென்னைக்கு அருகாமையில் உள்ள வள்ளூரில் தேசிய அனல் மின் கழகமும், தமிழக மின்சார வாரியமும் இணைந்து மின் உற்பத்தி நிறுவனத்தை துவங்கி உள்ளது. இதில் மூன்று அலகுகள் 1500 மெகாவாட் மின்சார உற்பத்தி திறன் கொண்டது, இம்மின் நிலையத்தில் 1500 ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். ஏற்கனவே சில நூறு ஒப்பந்த தொழிலாளர்கள் வடசென்னை அனல் மின் நிலைய கிளை மூலமாக மத்திய அமைப்பில் உறுப்பினராக சேர்ந்துள்ளனர். இந்நிலையில் அம்மின் நிலையத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் கிளையை துவங்குவதென்றும், அது டிசம்பர் 15 முதல் 25 க்குள் ஒரு நாளில் கிளை பேரவையை நடத்தி, நிர்வாகிகளை தேர்வு செய்து மத்திய அமைப்பின் கிளையைத் துவங்குவது, அதே போல் தூத்துக்குடியில் நெய்வேலி அனல் மின் நிலையமும், மின்வாரியமும் இணைந்து மின் உற்பத்தி நிலையத்தை அமைத்து வருகிறது. அங்கும் ஒப்பந்த தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் பணியாற்றுகின்றனர். அவர்களை உறுப்பினர்களாக்கி, மத்திய அமைப்பின் கிளையை டிசம்பர் இறுதிக்குள் துவங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## களப்பிரிவு ஊழியர்கள் பதவி உயர்வு

மின் வாரியத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்க இரு வழிப்பாதை பின்பற்றப்படுகிறது. அதில் இளையவர்கள் பதவி உயர்வு பெற்ற பிறகும் முதியவர்கள் பதவி உயர்வுக்காக காத்திருக்க வேண்டிய பாதிப்புகள் நிகழ்கின்றன. அவைகளை களைய தொழிற்சங்கங்களின் வேண்டுகோளின் அடிப்படையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவும் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

வாரியமானது குழுவின் அறிக்கையை தொழிற்சங்கள் மத்தியில் கொடுத்து கருத்துக்களை கேட்டுள்ளது. நாம் அளிக்க வேண்டிய கருத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே கிளைகளுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளது. சில கிளைகளிலிருந்து ஓரிரண்டு, கருத்துக்கள் வந்துள்ளன. வந்துள்ள கருத்துக்களையும் தொகுத்து மின்வாரிய நிர்வாகத்திற்கு நமது ஆலோசனையை வழங்க உள்ளோம்.

மின் வாரியத்தில் களப்பிரிவு பதவி உயர்வில் இதுவரை குழப்பங்களை விளைவித்த பாதைகள் என்பது அகற்றப்பட்டு களப்பிரிவு, வணிகப் பிரிவு என இரு தனி பிரிவுகளாக ஆக்கியுள்ளதை மின் வாரியத்திலுள்ள பெரும்பாலான தொழிற்சங்கங்கள் வரவேற்பது என்றும், வாரியம் கொடுத்துள்ள பதவிகள் குறைப்பு என்பதை ஏற்றுக் கொள்ளாத வகையில் ஒரு பொதுவான புரிதலுக்கு வருவது, அதை ஒத்த கருத்துடைய தொழிற்சங்கங்களோடு பேசி வாரியத்தை அணுகுவது என்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

கணக்கீட்டுப்பிரிவு, நிர்வாகப்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையில் மின் ஊழியர் மத்திய அமைப்பு கொடுத்த ஆலோசனையின் மீது வாரியம் ஒரு ஆலோசனையை தயாரித்து வருகிறது. அந்த ஆலோசனை இம்மாத இறுதிவாக்கிலோ அல்லது டிசம்பர் முதல் வாரத்திலோ கிடைக்க வாய்ப்புள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

கணக்கீட்டுப் பிரிவு, நிர்வாகப்பிரிவு, களப்பிரிவில் வாரியம் ஆலோசனை வழங்கியுள்ள இருபிரிவு பதவி உயர்வு போன்றவைகளை மின் வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அதை துண்டறிக்கையாக அச்சடித்து ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

கணக்கீட்டாளரில் இருந்து கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு வழங்க பேனல் பட்டியல் தயாரிக்க தகுதி காண் அறிக்கை கேட்கப்பட்டதில் 10 க்கும் குறைவான திட்டங்களில் இருந்தே அறிக்கை என்பது கிடைக்கப் பெற்றுள்ளது. மீதமுள்ள திட்டங்களிலிருந்து அறிக்கை பெற்று பேனல் தயாரிக்க உள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையிலிருந்து கணக்கீட்டாளராக பதவி உயர்வு அளிக்க திட்டங்களில் டி.பி.சி. நடத்தி அதன் விபரங்கள் 24.11.2014 அன்று தான் முழுமையாக வந்துள்ளது. அதைதொகுத்து பரிசீலித்து 20 தினங்களுக்குள் பதவி உயர்வு வழங்க வாய்ப்புள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுள்ள



**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

- 2014 ஆம் ஆண்டு முடிவு அடையும் நிலையில் பல கிளைகளில் உறுப்பினர் புதுப்பித்தல் இன்னும் முடிவு அடையாத நிலையிலே உள்ளது என்பதை குறிப்பிட்டு, உறுப்பினர் புதுப்பித்தலை வேகப்படுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.
- 2015 நாட்குறிப்பு கொண்டு வருவதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன.
- கிளைகள் தங்கள் கிளைக்கு வேண்டிய நாட்குறிப்பின் எண்ணிக்கையும், கிளை தலைவர், செயலாளர் ஆகியோர்களின் பெயர்கள் முகவரிகள், கைப்பேசி எண்கள் போன்றவற்றை உடனடியாக அனுப்பி வைத்து உதவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
- கணக்கு மேற்பார்வையாளரிலிருந்து உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கிட பேனல் தயாரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

**நோட்டீஸ் நகல்**

# மின்வாரிய ஊழியர்களின் பதவி உயர்வுகளை சீரமைத்திடுவோம்

தமிழக மின்சார வாரியம் இந்திய மின் வாரியங்களில் முதன்மை வாரியமாக செயல்பட்டு வருகிறது. இவ்வாறு சிறப்பாக செயல்படும் தமிழக மின்சார வாரியத்தில் அதிகாரிகள், பொறியாளர்கள் உட்பட 85000 க்கும் மேல் பணியாற்றுவதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

தமிழக மின் வாரியத்தில் பணியாற்றும் 85000 ஊழியர்களில் 10000க்கும் மேற்பட்டவர்கள் பொறியாளர்களாகவும், அதிகாரிகளாகவும் 45000 க்கும் மேற்பட்டவர்கள் களப்பணி ஊழியர்களாகவும் மீதமுள்ளவர்கள் வருவாய், கணக்கீடு, நிர்வாகம், தணிக்கை, பண்டக சாலை போன்ற பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்களாக உள்ளனர்.

மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஏற்றத் தாழ்வான பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்புகளே உள்ளன. பொறியாளர்களை எடுத்துக் கொண்டால் உதவி செயற்பொறியாளர் வரை பதவி உயர்வு பெறுவதற்கு தனது பணிக்காலத்தில் பெரும் பகுதியை கடக்க வேண்டியுள்ளது.

கணக்குப் பிரிவு ஊழியர்களுக்கு கிடைக்கின்ற பதவி உயர்வு வாய்ப்பு, நிர்வாக, கணக்கீட்டு, பண்டக சாலை, கள பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இல்லை என்ற ஏக்கம் உள்ளது.

மின்வாரிய ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை அகற்றும் விதமாக மொத்த பணிக்காலத்தில் குறைந்தபட்சம் மூன்று பதவி உயர்வுகளை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று வாரியத்தை வலியுறுத்த 1998 இல் ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் இக்கோரிக்கை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிமுறைகளை வகுத்தெடுத்துக் கொள்ளலாம் என்று 1998 இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் சரத்தாக சேர்க்கப்பட்டும் 16 ஆண்டுகள் கடந்த பின்னரும் அது காணல் நீராகவே உள்ளது.

பணிக்காலத்தில் மூன்று பதவி உயர்வு என்ற கோரிக்கையை ஊதிய உயர்வு கோரிக்கைகளில் ஒன்றாக வைத்து பேச்சு வார்த்தை நடத்தி முடிவெடுக்கும் தருவாயில் அரசின் தலையீட்டின் காரணமாக தற்போதுள்ள வாரியத்தலைவரின் முன் முயற்சி பின்னுக்கு தள்ளப்பட்டது.

பதவி உயர்வில் வாரிய ஊழியர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற தமிழக அரசு நிர்வாகத்தின் தலையீட்டினால் பின்னடைவு ஏற்பட்ட போதிலும் மூன்று பதவி உயர்வுகள் இன்றி பணி ஓய்வு பெறும், குறிப்பிட்ட பகுதி ஊழியர்கள் இருப்பார்களேயானால் அப்பிரிவுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்கி அக்குறைகளை சரி செய்யலாம் என்று வாரியத் தரப்பில் கூறப்பட்டதை நினைவிலே கொள்ள வேண்டியுள்ளது.

மின்வாரியத்தில் கணக்குப்பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அவர்கள் பணிக்காலத்தில் ஏழு அடுக்கு பதவி உயர்வு பெற வாய்ப்புகள் உள்ளதை சுட்டிக்காட்டி அது கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கும், நிர்வாகப்பிரிவு ஊழியர்களுக்கும் அந்த வாய்ப்புகள் இல்லாத நிலையே உள்ளது. இதை அகற்றும் விதமாக கணக்கீட்டுப் பிரிவில் உப கோட்டங்களுக்கு ஒரு கணக்கீட்டு அலுவலரும், மேற்பார்வை பொறியாளர் அலுவலங்களுக்கு ஒரு முதன்மை கணக்கீட்டு அலுவலர் பதவியையும், தலைமை பொறியாளர் அலுவலங்களுக்கு ஒரு தலைமை கணக்கீட்டு அலுவலர் பதவியையும் வேண்டி கோரிக்கை கொடுத்துள்ளோம்.

நிர்வாகப்பிரிவில் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை அகற்றும் வகையில் அனைத்து கோட்டங்களுக்கும் உதவி நிர்வாக அலுவலர் பதவியும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களுக்கு ஒரு நிர்வாக அலுவலர் பதவியையும், புனல் மின் திட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களில் ஒரு உதவி நிர்வாக அலுவலர் பதவியும், ஒரு நிர்வாக அலவலர் பதவியையும், தற்போது அனல் மின் நிலையங்களில் உள்ள தலைமை பொறியாளர் அலுவலகத்திற்கு அனுமதித்துள்ள முதன்மை நிர்வாக அலுவலர் பதவியை அனைத்து தலைமை பொறியாளர் அலுவலகத்திற்கு வழங்கிட வேண்டும் என்று கோரிக்கையை கொடுத்துள்ளோம்,

இதுவும் வாரியத்தின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இம்மாத இறதிக்குள்ளோ, அடுத்த மாதம் முதல் வாரத்திலோ இவ் இரு பிரிவு ஊழியர்களின் புதிய பதவிஉயர்வு வாய்ப்புகளை உருவாக்கும் ஆலோசனையை அளித்து பேச்சு வார்த்தையும், பதவி உயர்வு வாய்ப்புகளும் உருவாக வாய்ப்புகள் உள்ளன.

இக்கால கட்டத்தில் தான் அனல், புனல், பொதுகட்டுமான வட்டத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகள் உருவாக்கும் ஒப்பந்தங்கள் ஏற்பட்டு அது அமலாக்கப்பட்டுள்ளது என்பது தொழிற்சங்கங்களின் எடுத்த முயற்சிக்கு பலனாகும்.

இவைகளின் பின்னணியில் தான் மின்வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 9.1.2014 அன்று ஏற்பட்ட போது களப்பிரிவில் ஒரு வழிப்பாதை, இரு வழிப்பாதை என்ற பாதைகள் மாறி மாறி பின்பற்றப்பட்டதும், அதனால் பதவி உயர்வில் ஏற்பட்ட குளறுபடிகளை அகற்றிட வேண்டி ஒரு தீவிரமான பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டும் என்று வாரியத்தை வற்புறுத்தியதின் அடிப்படையிலேயே களப்பிரிவில் பதவி உயர்வுக்கு பின்பற்றப்படும் இருவழிப்பாதை சம்மந்தமாக முழுமையாக பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவும் தனது பரிசீலனை அறிக்கையை முன் வைத்துள்ளது.

களப்பிரிவு ஊழியர்களின் இரு வழிப்பாதை பதவி உயர்வு என்பது கைவிடப்பட்டு இருதனிப் பிரிவுகளாக அதாவது களப்பிரிவு, வணிகப்பிரிவு என இரு பிரிவுகளாக்கப்பட்டு அவைகளுக்கான பதவி உயர்வு ஆலோசனையும் முன் வைக்கப்பட்டுள்ளது.

வாரிய வரலாற்றை உற்று நோக்கும் போது களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வுக்காக வகுத்திட்ட வழி முறைகள் மாறி மாறி பின்பற்றப்பட்டதனால் குழப்ப நிலையும், பணியில் இளையவர்கள் பதவி உயர்வு முந்திப் பெறுவதும், பணியில் முதியவர்கள் பதவி உயர்வுக்கு பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய அவலநிலையும் நீடித்தது. அதாவது 1980 முன்பு வணிக பிரிவில் வணிக ஆய்வாளருக்கு மேல் பதவி உயர்வே இல்லாத வாய்ப்பு என்பது 1980 ஆம் ஆண்டுக்கு பிறகு களப்பிரிவையும், வணிகப்பிரிவையும் ஒன்றாக இணைத்து பதவி உயர்வு வழங்கப்பட்டது. 1980 இல் ஒரு வழிப்பாதை என்பது மாற்றப்பட்டு 1996 வரை இருவழிப்பாதையாகவும், 1996 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை ஒரு வழிப்பாதையாகவும், 2005 ஆம் ஆண்டு முதல் இருவழிப்பாதையாக மாற்றப்பட்டு அது இன்று வரை தொடர்கிறது. இரு வழிபாதையில் இருந்து முகவர் பதவி உயர்வு வழங்கும் போது ஹெல்பர் சீனியாரிட்டி அல்லது பேனல் சீனியாரிட்டி என குழப்பம் ஏற்பட்டு களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் ஏற்பட்ட பாதை மாற்றங்களால் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் ஏற்பட்டது குழப்பமே

களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக வாரியம் அளித்துள்ள ஆலோசனையில் பாதைகள் அகற்றப்பட்டு களப்பிரிவும், வணிகப்பிரிவும் தனிப்பிரிவுகளாக அறிவிக்கப்பட்டு அதற்கான பதவி உயர்வு வாய்ப்புகளும் அறிவிக்கப்பட்டுள்ளதினால் களப்பிரிவுக்கும், வணிகப்பிரிவுக்கும் மாறி மாறி செல்லும் பாதைகள் அடைக்கப்பட்டதோடு கல்வி தகுதி உள்ளவர்களுக்கும், குறைவான கல்வி தகுதி உள்ளவர்களுக்கும் இடையிடையே ஏற்படும் மோதல்கள் என்பது அகற்றப்பட்டு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப கல்வி தகுதி உள்ளவர்கள் வணிகப் பாதையையும், கல்வித் தகுதி உடையர்களும் குறைவான கல்வி தகுதி உள்ளவர்களும் கல்வி தகுதியற்றவர்களும், களப்பிரிவு பாதையை தேர்வு செய்ய மோதல் இல்லாமல் வாய்ப்பளித்துள்ளது வரவேற்கத்தக்கது. அமல்படுத்தப்பட வேண்டியது. களப்பிரிவும், வணிகப்பிரிவும் முட்டி மோதுவதை தவிர்த்து வணிகப்பிரிவை தனி பிரிவாக்கி உதவி வணிக மேற்பார்வையாளர், வணிக மேற்பார்வையாளர் என்ற இரு புதிய பதவிகளை ஏற்படுத்தி உள்ளது பத்தாண்டுகளுக்கு முன்பாக நாம் வைத்த கோரிக்கை என்றால் அது மிகை அல்ல.

களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வுக்கு வாரியம் அளித்துள்ள ஆலோசனையில் சில ஓட்டைகளும் குறைகளும் இருக்கத்தான் செய்கிறது. அந்த ஓட்டைகளையும் குறைகளையும் அகற்றி களப்பிரிவு, வணிகப்பிரிவு இரு பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் சமநிலைப்படுத்தும் ஆலோசனைகளையே மத்திய அமைப்பு வழங்கிட உள்ளது.

## களப்பணி ஊழியர்களுக்கு, பதவி உயர்வு சம்மந்தமாக வாரியம் அளித்துள்ள ஆலோசனையின் மீது மின்ஊழியர் மத்திய அமைப்பின் கருத்துக்கள்

1) அனைத்து பிரிவு அலுவலகங்களுக்கு (கிராமியம் உட்பட) ஒரு வணிக ஆய்வாளர், ஒரு வணிக உதவியாளர் என்ற தற்போதுள்ள நிலையே தொடர வேண்டும்.

2) 110 கே.வி. (non grid) துணை மின் நிலையங்களில் உள்ள 600 முகவர் முதல் நிலை பதவிகளை ரத்து செய்வது என்பதாக கொடுக்கப்பட்ட ஆலோசனையை வாரியம் கைவிடவேண்டும்.

3) கம்பியாளர் முதல் சிறப்பு நிலை முகவர் வரை கல்வித் தகுதியை தளர்த்தி பதவி உயர்வு வழங்குவது தொடரவேண்டும்.

4) களப்பணி ஊழியர்களுக்கான பதவி உயர்வில் பதவி உயர்வுக்கு 5, 8 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்ற சரத்து பணி விதிகளிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

5) மின் பாதை ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வில் உள்ள தேக்க நிலை அகலும் வகையில் அனைத்து பிரிவுகளுக்கும் சிறப்பு நிலை முகவர் பதவி வழங்கிட வேண்டும்.

6) ஆண்டுதோறும் காலிப்பணியிடங்களை நிரப்பிட உத்தரவாதம் செய்யும் வகையில் ஒப்பந்தம் அமைய வேண்டும்.

7) உபகோட்ட அலுவலகங்களுக்கு, ஒரு வணிக ஆய்வாளர் மற்றும் ஒரு உதவி வணிக மேற்பார்வையாளர் பதவிகள் வழங்கிட வேண்டும்.

8) கோட்ட அலுவலகங்களில் இரு உதவி வணிக மேற்பார்வையாளர் மற்றும் ஒரு வணிக மேற்பார்வையாளர் பதவிகளை வழங்கிட வேண்டும்.

9) அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களிலும் ஒரு வணிக மேற்பார்வையாளர் பதவி வழங்கிட வேண்டும்.

10) சிவில் உபகோட்ட அலுவலகங்களுக்கு ஒரு முகவர் முதல் நிலை பதவி வழங்கிட வேண்டும்.

11) கட்டுமான உபகோட்ட அலுவலகங்களுக்கு ஒரு உதவி வணிகமேற்பார்வையாளர் பதவி வழங்கிட வேண்டும்.

12) இந்த புதிய பதவி உயர்வு முறையை அமலாக்க துவங்கும் போது புதியதாக அளித்துள்ள பதவிகளை நிரப்ப ஒரு முறை பதவி மாற்றத்துக்கு அனுமதி அளித்திட வேண்டும்.

13) அர்பன் மற்றும் ரூரல் பிரிவுகளுக்கு கூடுதலாக ஒரு மின் பாதை ஆய்வாளர் பதவி அனுமதி அளித்திட வேண்டும்.

மின்வாரியத்திலுள்ள பெரும்பான்மையான சங்கங்களும் வாரிய ஆலோசனையை வரவேற்கும் நிலையிலேயே உள்ளனர். மின் வாரியத்திலுள்ள ஒரு தொழிற்சங்கம் மட்டும் இந்த ஆலோசனைகளுக்கு மாற்றான ஆலோசனையை பதிவு செய்யும் போது அவர் வாதாடும் பிரிவு ஊழியர்களின் கோரிக்கையை வலுவாக வைத்து வாதிடுவதில் எந்த வித இரு வித கருத்துக்களும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் மின் வாரியத்தின் வருவாய்க்கு முதுகெலும்பாக நின்று பணியாற்றும் கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் பணியை கொச்சப்படுத்தும் விதமாக கருத்துக்களை தெரிவித்துள்ளது. அவர்கள் முன்வைக்கும் கோரிக்கையில் உள்ள பலகீனத்தை வெளிப்படுத்துவதோடு அவர்களது சங்க நாகரீகத்தையே காட்டும் விதமாக உள்ளது.

மிகக் குறைந்த மின் இணைப்புகள், மிக குறைந்த வருவாயில் உள்ள கிராமிய பிரிவுகளின் கூட ஒரு கணக்கீட்டாளர், ஒரு கணக்கீட்டு ஆய்வாளர், ஒரு வருவாய் மேற்பார்வையாளர் என்ற வீணான பதவிகள் வழங்கியுள்ளதால், 8.30 மணிக்கு அலுவலகம் வந்து மாலை 3.00 மணிக்கு டாடா காட்டி விட்டு வீட்டிற்கு செல்லும் ஊழியர்கள் என்ற கருத்தை தெரிவித்து தனது தொழிற்சங்க நாகரீகத்தை வெளியிடும் அமைப்புகளும் மின்வாரியத்தில் இருக்கத் தான் செய்கிறது.

இந்நிலையில் களப்பிரிவு ஊழியர்கள் சம்மந்தமாக வாரியம் அளித்துள்ள ஆலோசனைகளில் உள்ள குறைகளை மாற்றி அமைக்கும் விதமாக நாம் கொடுத்த ஆலோசனைகளை வலியுறுத்தி மாற்றம் காண செய்வோம். **மாற்றத்தை அமல்படுத்த நாமும் ஒத்த கருத்துடைய தொழிற்சங்கங்களும் ஒன்றாக நிற்போம்.**

CITU

**தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு**

...................................... கிளை